**சுருக்கம்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994) – புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம், புதுக்கோட்டை, அன்னவாசல், மற்றும் அரிமளம் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து 8 கிராம ஊராட்சிகளை முழுமையாகவும் 3 கிராம ஊராட்சிகளை பகுதியாகவும் புதுக்கோட்டை நகராட்சியுடன் இணைத்து புதுக்கோட்டை மாநகராட்சியாக தரம் உயர்த்தி மறுசீரமைப்பு செய்து அரசாணை மற்றும் அறிவிக்கை வெளியிடப்பட்டது – திருவரங்குளம், புதுக்கோட்டை, அன்னவாசல், மற்றும் அரிமளம் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 8 கிராம ஊராட்சிகளை முழுமையாகவும் 3 கிராம ஊராட்சிகளை பகுதியாகவும் நீக்கி ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்து ஆணை மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 (தமிழ்நாடு சட்டம் 21/1994) பிரிவு 15, உட்பிரிவு (4)(i)–ன்படி அறிவிக்கை – வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி [பரா–2(1)]த் துறை**

**அரசாணை (நிலை) எண்.69**

**நாள் .13.03.2026.**
**விசுவாவசு, மாசி – 29 ,**
**திருவள்ளுவர்ஆண்டு 2057.**
**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண் 104, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 10.08.2024.
2. தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழ் எண். 257, நாள் 10.08.2024.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.69023/2023/ப.ரா.1.1, நாள் 05.03.2026.

-------

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து திருக்கட்டளை கிராம ஊராட்சி, புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 9–ஏ நத்தம்பண்ணை, 9–பி நத்தம்பண்ணை, கவிநாடு கிழக்கு, கவிநாடு மேற்கு, முள்ளூர், திருமலைராய சமுத்திரம், வாகவாசல் ஆகிய 7 கிராம ஊராட்சிகள், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து வெள்ளனூர் கிராம ஊராட்சிப் (முல்லைநகர், வடசேரிப்பட்டி,

ரெங்கம்மாள் சத்திரம், சிவப்பட்டி மற்றும் தாவூது மில் குக்கிராமங்கள் மட்டும்) பகுதியாகவும், திருவேங்கைவாசல் கிராம ஊராட்சிப் (வலையன்வயல், அன்னத்து ஊரணி, வடமாலாபூர், எல்லைப்பட்டி அம்மன்நகர்) பகுதியாகவும், அரிமளம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து தேக்காட்டூர் கிராம ஊராட்சிப் (இளங்குடிப்பட்டி, மேலதேமுத்துப்பட்டி, சிவபுரம், மழுக்கன்பட்டி, கீழதேமுத்துப்பட்டி மற்றும் கம்மஞ்செட்டி சத்திரம்) பகுதியாகவும் ஆகமொத்தம் 8 கிராம ஊராட்சிகளை முழுமையாகவும் 3 கிராம ஊராட்சிகளை பகுதியாகவும் புதுக்கோட்டை நகராட்சியுடன் இணைத்து புதுக்கோட்டை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட 10.08.2024–ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டது.

2. இந்நிலையில் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதத்தில், புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 1 கிராம ஊராட்சி மற்றும் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 7 கிராம ஊராட்சிகளையும், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து வெள்ளனூர் கிராம ஊராட்சியில் (5 குக்கிராமங்கள் மட்டும்), திருவேங்கைவாசல் கிராம ஊராட்சியில் (4 குக்கிராமங்கள் மட்டும்) மற்றும் அரிமளம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து தேக்காட்டூர் கிராம ஊராட்சியில் (6 குக்கிராமங்கள் மட்டும்) பகுதியாகவும் புதுக்கோட்டை நகராட்சியுடன் இணைத்து புதுக்கோட்டை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு, மேலே 1 மற்றும் 2–இல் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அறிவிக்கை வெளியிடப்பட்டு அதன்படி 10.08.2024 அன்று மேற்குறிப்பிட்ட 8 கிராம ஊராட்சிகளை முழுமையாகவும் 3 கிராம ஊராட்சிகளை பகுதியாகவும் புதுக்கோட்டை நகராட்சியுடன் இணைத்து புதுக்கோட்டை மாநகராட்சியின் கீழ் செயல்பட்டு வருகிறது எனத் தெரிவித்துள்ளார். அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைக்கப்பட்ட கிராம ஊராட்சிகளின் பெயர் |
|---|---|---|---|
| 1 | புதுக்கோட்டை | திருவரங்குளம் | திருக்கட்டளை |
| 2 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 9–ஏ நத்தம்பண்ணை |
| 3 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 9–பி நத்தம்பண்ணை |
| 4 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | கவிநாடு கிழக்கு |
| 5 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | கவிநாடு மேற்கு |
| 6 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | முள்ளூர் |
| 7 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | திருமலைராய சமுத்திரம் |
| 8 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | வாகவாசல் |

| | | | |
|---|---|---|---|
| 9 | புதுக்கோட்டை | அன்னவாசல் | வெள்ளனூர் கிராம ஊராட்சிப் பகுதியாக – முல்லைநகர், வடசேரிப்பட்டி, ரெங்கம்மாள் சத்திரம், சிவப்பட்டி மற்றும் தாவூது மில் குக்கிராமங்கள் மட்டும்) வார்டு எண். 7, 8 மற்றும் 9. |
| 10 | புதுக்கோட்டை | அன்னவாசல் | திருவேங்கைவாசல் கிராம ஊராட்சிப் பகுதியாக– வலையன்வயல், அன்னத்து ஊரணி, வடமாலாபூர், எல்லைப்பட்டி அம்மன்நகர் குக்கிராமங்கள் பகுதியாக) – வார்டு எண். 3 மற்றும் 4. |
| 11 | புதுக்கோட்டை | அரிமளம் | தேக்காட்டூர் கிராம ஊராட்சிப் பகுதியாக –(இளங்குடிப்பட்டி, மேலதேமுத்துப்பட்டி, , மழுக்கன்பட்டி, சிவபுரம் குக்கிராமங்கள் முழுவதும் மற்றும் கம்மஞ்செட்டி சத்திரம், கீழதேமுத்துப்பட்டி குக்கிராமங்கள் பகுதியாக) – வார்டு எண். 1,2 மற்றும் 3. |

3. மேலும், மக்கள்தொகை கணக்கெடுப்பு பணி (Census) மேற்கொள்ளப்பட்டு வருவதால் மேற்குறிப்பிட்டுள்ள 8 கிராம ஊராட்சிகள் முழுவதுமாகவும் மற்றும் 3 கிராம ஊராட்சிகள் பகுதியாகவும் புதுக்கோட்டை நகராட்சியுடன் இணைக்கப்பட்டதை தொடர்ந்து திருவரங்குளம், புதுக்கோட்டை, அன்னவாசல், அரிமளம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து நீக்கம் செய்த திருக்கட்டளை, 9–ஏ நத்தம்பண்ணை, 9–பி நத்தம்பண்ணை, கவிநாடு கிழக்கு, கவிநாடு மேற்கு, முள்ளூர், திருமலைராயசமுத்திரம், வாகவாசல், வெள்ளனூர் (பகுதி), திருவேங்கைவாசல் (பகுதி) மற்றும் தேக்காட்டூர் (பகுதி) கிராம ஊராட்சிகளுக்கு உட்பட்ட அதிகார வரம்பு மாற்றங்கள் புதுக்கோட்டை மாநகராட்சியின் கீழ் செயல்பட்டு வருகிறது எனவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. இந்நிலையில் மேற்காண் அரசாணை மற்றும் அறிவிக்கை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டை நகராட்சியுடன் முழுவதுமாகவும் இணைக்கப்பட்ட 8 கிராம ஊராட்சிகள் மற்றும் பகுதியாக இணைக்கப்பட்ட 3 கிராம ஊராட்சிகள் திருவரங்குளம், புதுக்கோட்டை, அன்னவாசல் மற்றும் அரிமளம் ஆகிய 4 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து நீக்கி ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்து அரசாணை மற்றும்

அறிவிக்கை வெளியிடும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி அரசாணை மற்றும் அறிவிக்கை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. மேற்காண் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்து, மேலே 1 மற்றும் 2–இல் படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அறிவிக்கையில் புதுக்கோட்டை மாவட்டத்தில், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து திருக்கட்டளை கிராம ஊராட்சி, புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திலிருந்து 9–ஏ நத்தம்பண்ணை, 9–பி நத்தம்பண்ணை, கவிநாடு கிழக்கு, கவிநாடு மேற்கு, முள்ளூர், திருமலைராய சமுத்திரம், வாகவாசல் ஆகிய 7 கிராம ஊராட்சிகள், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து வெள்ளனூர் கிராம ஊராட்சிப் (முல்லைநகர், வடசேரிப்பட்டி, ரெங்கம்மாள் சத்திரம், சிவப்பட்டி மற்றும் தாவூது மில் குக்கிராமங்கள் மட்டும்) பகுதியாகவும், திருவேங்கைவாசல் கிராம ஊராட்சிப் (வலையன்வயல், அன்னத்து ஊரணி, வடமாலாபூர், எல்லைப்பட்டி அம்மன்நகர் குக்கிராமங்கள் பகுதியாக) பகுதியாகவும், அரிமளம் ஊராட்சி ஒன்றியத்திலிருந்து தேக்காட்டூர் கிராம ஊராட்சிப் (இளங்குடிப்பட்டி, மேலதேமுத்துப்பட்டி, சிவபுரம், மழுக்கன்பட்டி குக்கிராமங்கள் முழுவதும் மற்றும் கீழதேமுத்துப்பட்டி, கம்மஞ்செட்டி சத்திரம் குக்கிராமங்கள் பகுதியாக) பகுதியாகவும் ஆகமொத்தம் 8 கிராம ஊராட்சிகளை முழுமையாகவும் 3 கிராம ஊராட்சிகளை பகுதியாகவும் புதுக்கோட்டை நகராட்சியுடன் இணைக்கப்பட்டதால், மேற்குறிப்பிட்டுள்ள 8 கிராம ஊராட்சிகளை முழுமையாகவும் 3 கிராம ஊராட்சிகளை பகுதியாகவும் திருவரங்குளம், புதுக்கோட்டை, அன்னவாசல் மற்றும் அரிமளம் ஆகிய 4 ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து நீக்கி ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்து ஆணை மற்றும் 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு–15, உட்பிரிவு(4)(i)–ன்படி அறிவிக்கை வெளியிட அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணையினைத் தொடர்ந்து, 13.03.2026 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் பின்னிணைப்பில் கண்டுள்ள அறிவிக்கைகளை (I, II, III & IV) தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடுமாறு பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–75 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–75
( 13.03.2026 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் அறிவிக்கை வெளியிட)

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித்தலைவர், புதுக்கோட்டை மாவட்டம்.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (சென்னை மாவட்டம் நீங்கலாக).

**நகல்**

முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

13/3/2026

**APPENDIX**
**NOTIFICATION – I.**

In exercise of the powers conferred by clause (i) of sub-section (4) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994) and in partial modification of the Notification Published in respect of declaration of Thiruvarankulam Panchayat Development Block under sub-section (3) of that section, the Governor of Tamil Nadu hereby excludes the local area comprised in the Thirukkattalai Village Panchayat from the Thiruvarankulam Panchayat Development Block in Pudukottai District, consequent on their inclusion within the Pudukkottai City Municipal Corporation by Municipal Administration and Water Supply Department vide Notification No.II(2)/MAWS/743(a-3)/2024, published at page 3 of Part-II-Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 10th August 2024.

2. Based on the above exclusion, wards will be divided for the next ordinary election.

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

Section Officer

13/3/2026

## அறிவிக்கை – I.

1994 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் (i)–ஆம் கூறில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, மேலும் அதே பிரிவின் உட்பிரிவு (3)–இன்படி, திருவரங்குளம் ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக விளம்புகை செய்யப்பட்ட அறிவிக்கையினை பகுதியாக திருத்தம் செய்யும் வகையில், திருக்கட்டளை கிராம ஊராட்சி புதுக்கோட்டை மாநகராட்சியுடன் இணைத்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அறிவிக்கை எண். II(2)/ந.நி(ம)கு.வ./743(a–3)/2024, 10 ஆகஸ்ட் திங்கள் 2024, தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் பக்கம் 3, பகுதி II – பிரிவு 2 மூலம் அறிவிக்கை வெளியிடப்பட்டதின் காரணமாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள திருவரங்குளம் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து திருக்கட்டளை கிராம ஊராட்சியின் உள்ளூர் பகுதிகளை தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் நீக்குகிறார்.

2. மேற்சொன்ன பகுதிகள் நீக்கத்தின் அடிப்படையில், அடுத்து வரும் சாதாரணத் தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

ப.தீ. [signature]
பிரிவு அலுவலர்
13/3/2026

**NOTIFICATION – II.**

In exercise of the powers conferred by clause (i) of sub-section (4) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994) and in partial modification of the Notification published in respect of Pudukkottai Panchayat Development Block under sub-section (3) of that section, the Governor of Tamil Nadu hereby excludes the local areas comprised in the Village Panchayats specified below, from the Pudukkottai Panchayat Development Block in Pudukkottai District, consequent on their inclusion within the Pudukottai City Municipal Corporation by Municipal Administration and Water Supply Department vide Notification No.II(2)/MAWS/743(a-3)/2024, published at page 3 of Part-II-Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 10th August 2024.

2. Based on the above exclusion, wards will be divided for the next ordinary election.

**Name of the Village Panchayats.**

(1) 9-A Nathampannai.

(2) 9-B Nathampannai .

(3) Kavinad East.

(4) Kavinad West.

(5) Mullur.

(6) Thirumalairaya Samuthiram.

(7) Vagavasal.

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

P.D. [signature]
Section Officer

13/3/2026

## அறிவிக்கை – II.

1994 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் (i)–ஆம் கூறில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, மேலும் அதே பிரிவின் உட்பிரிவு (3)–இன்படி, புதுக்கோட்டை ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக விளம்புகை செய்யப்பட்ட அறிவிக்கையினை பகுதியாக திருத்தம் செய்யும் வகையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளை புதுக்கோட்டை மாநகராட்சியுடன் இணைத்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அறிவிக்கை எண். II(2)/ந.நி(ம)கு.வ./743(a–3)/2024, 10 ஆகஸ்ட் திங்கள் 2024, தேதியிட்ட <u>தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில்</u> பக்கம் 3, பகுதி II – பிரிவு 2 மூலம் அறிவிக்கை வெளியிடப்பட்டதின் காரணமாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டை ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளின் உள்ளூர் பகுதிகளை தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் நீக்குகிறார்.

2. மேற்சொன்ன பகுதிகள் நீக்கத்தின் அடிப்படையில், அடுத்து வரும் சாதாரணத் தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

**கிராம ஊராட்சிகளின் பெயர்.**

(1) 9–ஏ நத்தம்பண்ணை.
(2) 9–பி நத்தம்பண்ணை.
(3) கவிநாடு கிழக்கு.
(4) கவிநாடு மேற்கு.
(5) முள்ளூர்.
(6) திருமலைராய சமுத்திரம்.
(7) வாகவாசல்.

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

ஹ.நீ. [signature]
பிரிவு அலுவலர்

13/3/2026

**NOTIFICATION – III.**

In exercise of the powers conferred by clause (i) of sub-section (4) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994) and in partial modification of the Notification published in respect of declaration of Annavasal Panchayat Development Block under sub-section (3) of that section, the Governor of Tamil Nadu hereby excludes the local areas comprised in the Village Panchayats (partly) specified below, from the Annavasal Panchayat Development Block in Pudukkottai District, consequent on their inclusion within the Pudukottai City Municipal Corporation by Municipal Administration and Water Supply Department vide Notification No.II(2)/ MAWS/743(a-3)/2024, published at page 3 of Part-II-Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 10th August 2024.

2. Based on the above exclusion, wards will be divided for the next ordinary election.

**Name of the Village Panchayat.**

(1) Vellanur – Partly (Mullainagar, Vadaseripatti, Rengammalchathiram, Sivapatti and Thavudhumil Habitations only) Ward Nos. 7, 8 and 9.

(2) Thiruvengaivasal – Partly (Valaiyanvayal, Annathuoorani, Vadamalapur, Yellaipatti amman nagar Habitations Partly) Ward Nos. 3 and 4.

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

Section Officer

13/3/2026

## அறிவிக்கை – III.

1994 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் (i)–ஆம் கூறில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, மேலும் அதே பிரிவின் உட்பிரிவு (3)–இன்படி, அன்னவாசல் ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக விளம்புகை செய்யப்பட்ட அறிவிக்கையினை பகுதியாக திருத்தம் செய்யும் வகையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளை பகுதியாக புதுக்கோட்டை மாநகராட்சியுடன் இணைத்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அறிவிக்கை எண். II(2)/ந.நி(ம)கு.வ./743(a–3)/2024, 10 ஆகஸ்ட் திங்கள் 2024, தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் பக்கம் 3, பகுதி II – பிரிவு 2 மூலம் அறிவிக்கை வெளியிடப்பட்டதின் காரணமாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அன்னவாசல் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளின் உள்ளூர் பகுதிகளை தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் நீக்குகிறார்.

2. மேற்சொன்ன பகுதிகள் நீக்கத்தின் அடிப்படையில், அடுத்து வரும் சாதாரணத் தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

**கிராம ஊராட்சியின் பெயர்.**

(1) வெள்ளனூர் – பகுதியாக (முல்லைநகர், வடசேரிப்பட்டி, ரெங்கம்மாள் சத்திரம், சிவப்பட்டி மற்றும் தாவூது மில் குக்கிராமங்கள் மட்டும்) வார்டு எண். 7, 8 மற்றும் 9.

(2) திருவேங்கைவாசல் – பகுதியாக (வலையன்வயல், அன்னத்து ஊரணி, வடமாலாபூர், எல்லைப்பட்டி அம்மன்நகர் குக்கிராமங்கள் பகுதியாக) – வார்டு எண். 3 மற்றும் 4.

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

13/3/2026

## NOTIFICATION – IV.

In exercise of the powers conferred by clause (i) of sub-section (4) of section 15 of the Tamil Nadu Panchayats Act, 1994 (Tamil Nadu Act 21 of 1994) and in partial modification of the Notification published in respect of declaration of Arimalam Panchayat Development Block under sub-section (3) of that section, the Governor of Tamil Nadu hereby excludes the local areas comprised in the Village Panchayat (partly) specified below, from the Arimalam Panchayat Development Block in Pudukkottai District, consequent on their inclusion within the Pudukottai City Municipal Corporation by Municipal Administration and Water Supply Department vide Notification No.II(2)/ MAWS/743(a-3)/2024, published at page 3 of Part-II-Section 2 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 10th August 2024.

2. Based on the above exclusion, wards will be divided for the next ordinary election.

**Name of the Village Panchayat.**

(1) Thekkattur – Partly (Ilangudippatti, Melathemuthupatti, Sivapuram, Malukkanpatti Habitations Fully and Keelathemuthupatti, Kammanchatti Sathiram Habitation Partly) Ward Nos.1, 2 and 3.

**GAGANDEEP SINGH BEDI**
**Additional Chief Secretary to Government.**

// TRUE COPY //

Section Officer

13/3/2026

## அறிவிக்கை – IV

1994 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (4) உட்பிரிவின் (i)–ஆம் கூறில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, மேலும் அதே பிரிவின் உட்பிரிவு (3)–இன்படி, அரிமளம் ஊராட்சி வளர்ச்சி வட்டாரமாக விளம்புகை செய்யப்பட்ட அறிவிக்கையினை பகுதியாக திருத்தம் செய்யும் வகையில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராம ஊராட்சியை பகுதியாக புதுக்கோட்டை மாநகராட்சியுடன் இணைத்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அறிவிக்கை எண். II(2)/ந.நி(ம)கு.வ./743(a–3)/2024, 10 ஆகஸ்ட் திங்கள் 2024, தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் பக்கம் 3, பகுதி II – பிரிவு 2 மூலம் அறிவிக்கை வெளியிடப்பட்டதின் காரணமாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரிமளம் ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிராம ஊராட்சியின் உள்ளூர் பகுதிகளை தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இதனால் நீக்குகிறார்.

2. மேற்சொன்ன பகுதிகள் நீக்கத்தின் அடிப்படையில், அடுத்து வரும் சாதாரணத் தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்படும்.

**கிராம ஊராட்சியின் பெயர்.**

(1) தேக்காட்டூர் – பகுதியாக (இளங்குடிப்பட்டி, மேலதேமுத்துப்பட்டி, சிவபுரம் மழுக்கன்பட்டி குக்கிராமங்கள் முழுவதும் மற்றும் கீழதேமுத்துப்பட்டி, மற்றும் கம்மஞ்செட்டி சத்திரம் குக்கிராமங்கள் பகுதியாக) – வார்டு எண். 1,2 மற்றும் 3.

**ககன்தீப் சிங் பேடி**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.**

//உண்மை நகல்//

4.தீ. செல்வி
பிரிவு அலுவலர்

13/3/2024